சார்பு நீதிமன்றம், விருதுநகர்

I.A. 2/22 in
H.M.O.P.No:113/2022

Date:12.01.2024

மனுதாரர் தரப்பு சாட்சி–2ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவர்த்தன் | சாதி | : | |
| த/பெ | : | ஸ்ரீனிவாசன் | சமயம் | : | |
| கிராமம் | : | அன்னை தெரசா நகர் | தொழில் | : | |
| தாலுகா | : | தூத்துக்குடி | வயது | : | 56 |

முதல் விசாரணை

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு 2வது சாட்சியாவேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சம்மனில் சொல்லியுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நான் Maris Associates Pvt Ltd., என்ற நிறுவனத்தில் Account Manager ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் சம்மனில் குறிப்பிட்டுள்ள முத்துராஜன், சிவராமன், லட்சுமணன் ஆகியோர் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அதற்கான அதிகார கடிதம் **சா.சா.ஆ.5** வரிசை(3 தாள்கள்) ஆகும். சம்மனில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் எதிர்மனுதாரர் கார்த்திக் மாரிமுத்து என்பவரின் பங்குகள் குறித்து விபரங்களை கொண்டு வந்துள்ளேன். 1) A.V.M மாரிமுத்து நாடார் & சன்ஸ் Private Ltd என்ற நிறுவனத்தில் கார்த்திக் மாரிமுத்துவின் பங்குகள் 1,17,771/–, அதன் மதிப்பு ரூ.11,77,710/–. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.6** ஆகும். 2) M. Edition & Company Pvt Ltd, என்ற நிறுவனத்தில்

கார்த்திக் மாரிமுத்துவின் பங்குகள் 1152. அதன் மதிப்பு ரூ.11,52,000/-. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.7** ஆகும்.. 3) எம்.வி.சுப்பிரமணியன் & Sons என்ற பெயரில் எந்த நிறுவனமும் செயல்படவில்லை. 4)எம்.வி.சுப்பிரமணியன் & பிரதரஸ் என்ற நிறுவனத்தில் கார்த்திக் மாரிமுத்து பங்குதாரர் கிடையாது. 5) AVM Hospital Pvt Ltd என்பது AVMM Associates Pvt Ltd என்று செயல்படுகிறது. அதில் கார்த்திக் மாரிமுத்துவின் பங்குகள் 1316. அதன் மதிப்பு ரூ.1,31,600/-. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.8** ஆகும். 6) AVM Marimuthu நாடார் & Sons என்ற நிறுவனமும் AVM Jewelers Pvt Ltd என்ற நிறுவனமும் ஒரே நிறுவனம் தான். அது AVM Marimuthu நாடார் & Sons என்ற பெயரில் தான் இயங்கி வருகிறது. 7)AVM Kamalavel Mahal என்ற நிறுவனத்தில் கார்த்திக் மாரிமுத்து என்பவர் பங்குதாரர் கிடையாது. இதை தவிர்த்து கார்த்திக் மாரிமுத்து என்பவர் Maris Associates Pvt Ltd என்ற நிறுவனத்தில் அதில் கார்த்திக் மாரிமுத்துவின் பங்குகள் 1393. அதன் மதிப்பு ரூ.13,93,000/-. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.9** ஆகும். (சா.சா.ஆ.6 முதல் சா.சா.ஆ.9 ஆவணங்கள் அனைத்தும் ஜெராக்ஸ் என்பதால் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சபேணையுடன் குறியீடு செய்யப்பட்டது). கார்த்திக் மாரிமுத்து என்பவர் பங்குதாரர்கள் உள்ள நிறுவனங்களின் பட்டியல் **சா.சா.ஆ.10.** கார்த்திக் மாரிமுத்து என்பவருக்கு பங்குள்ள சொத்துக்களின் பட்டியல் **சா.சா.ஆ.11** ஆகும்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

சா.சா.ஆ.5 ன் படி எனக்கு அதிகாரம் அளித்த மூவரும் தனிப்பட்ட முறையில் தான் அதிகாரம் வழங்கியுள்ளனர். அந்த மூவரும் சா.சா.ஆ.10 ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பங்குதாராகவும், இயக்குநர்களாகவும் உள்ளனர். சா.சா.ஆ.10 ல் உள்ள நிறுவனங்களில் கார்த்திக் மாரிமுத்து என்பவர் முதலீடு செய்யவில்லை, ஆனால் பங்குதாரராக உள்ளார். சா.சா.ஆ.10 ல் உள்ள நிறுவனங்களின் வருமானவரிகணக்குகள் மற்றும் லெட்ஜர் ஆகியவற்றின் உண்மை நகலை கொண்டுவரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.6 முதல் சா.சா.ஆ.9 ஆவணங்களின் அசலை கொண்டுவரவில்லை. சா.சா.ஆ.6 முதல் சா.சா.ஆ.10 வரையுள்ள ஆவணங்களில் M.V.லெட்சுமணன் என்பவர் உண்மை நகலுக்காக கையொப்பம் செய்துள்ளார். அந்த ஆவணங்களில் உண்மை நகல் என்று கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.6 முதல் சா.சா.ஆ.9 ஆவணங்களில் 3 நபர்களில் ஒருவர் மட்டும் தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மற்ற 2 நபர்களும் உடல்நிலை சரியில்லாததால் அவர்கள் கையொப்பமிடவில்லை. சா.சா.ஆ.5, சா.சா.ஆ.10, சா.சா.ஆ.11 ஆகிய ஆவணங்களில் உடல்நிலை சரியில்லாத நிலையிலும் அவர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். சா.சா.ஆ.5 முதல் சா.சா.ஆ.11 ஆவணங்களில் நேற்று தான் கையொப்பம் செய்தார்கள். சா.சா.ஆ.10 மற்றும் சா.சா.ஆ.11 உள்ள ஆவணங்களில் கார்த்திக் மாரிமுத்து பெயரில் பங்குகள் இருக்கிறது என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்., அந்த ஆவணங்கள் கார்த்திக் மாரிமுத்துவிடம் உள்ளது. ஆவணங்களை

பார்க்காமலேயே சா.சா.ஆ.10 மற்றும் சா.சா.ஆ.11ல் கார்த்திக் மாரிமுத்து பெயரில் பங்குகள் உள்ளதாக அந்த ஆவணங்களை தயாரித்துள்ளோம் என்று சொன்னால் அவர்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்துள்ளதால் அந்த 3 நபர்கள் சொன்னப்படி நான் Statement தயாரித்துள்ளோம். எனக்கு அதிகாரம் அளித்துள்ள 3 நபர்களையும் விசாரித்தால் தான் சா.சா.ஆ.10 மற்றும் சா.சா.ஆ.11ல் உள்ள சொத்துக்களின் உண்மைத்தன்மை, கார்த்திக்மாரிமுத்துவுக்கு உள்ள பங்குகள் குறித்து தெரியவரும் என்றால் சரிதான். அந்த நிறுவனங்களின் சார்பாக வருமானவரித்துறைக்கு கணக்குகள் தாக்கல்செய்துள்ளோம் என்றால் சரிதான். சா.சா.ஆ.6 முதல் சா.சா.ஆ.9 வரையுள்ள ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல் என்றும், அவற்றில் ஒரு நபர் மட்டும் தான் கையொப்பம் செய்துள்ளார் என்றும் மற்ற இயக்குநர்கள் கையொப்பம் செய்யவில்லை என்றும், அதனால் அந்த ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அவற்றின் உண்மை நகல்களை தாக்கல் செய்யாததாலும் அவை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. சா.சா.ஆ.6 முதல் சா.சா.ஆ.11 வரையுள்ள ஆவணங்களில் கார்த்திக் மாரிமுத்து பெயரில் உள்ள பங்குகளில் டிவிடெண்ட் மற்றும் வருமானம் எதுவும் இல்லை என்றும் அது கார்த்திக் மாரிமுத்து பெயருக்கு செலுத்தப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

கார்த்திக் மாரிமுத்துவிற்கு மேற்படி நிறுவனங்களில் இருந்து தற்போது தான் டிவிடெண்ட் மற்றும் வருமானம் வரவில்லையா என்று

கேட்டால் அந்த நிறுவனங்களில் லாபம் சேர்ந்து கொண்டிருக்கும், பின்னாட்களில் நிறுவனத்தின் பங்குதாரர்கள் அதன் லாபத்தில் இருந்து பிரித்து கொள்வார்கள். நிறுவனத்தில் இருந்து அவர்கள் விலகினாலும் அவர்களது பங்கை பொறுத்து அவர்களுக்கு ஈவுத்தொகை கிடைக்கும்.

**குறுக்கு விசாரணை–**

இதுவரை யாருக்கும் டிவிடெண்ட் மற்றும் வருமானம் கொடுக்கவில்லையா என்றால் கொடுக்கவில்லை.